சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – திரு. ப. கார்த்திக், த/பெ. (லேட்) திரு. மு. பச்சையப்பன் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது ஐப்பசி மாதம் 02–ம் நாள்

அரசாணை (டி) எண்.488 நாள் 19.10.2022

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ–1)த்துறை, நாள் 23.01.2020.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித ந.க.எண்.45640/ஆர்3/2010, நாள் 29.07.2022.

------

ஆணை:

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடிதத்தில், வேலூர் மண்டலம், உதவி இயக்குநர் அலுவலகம், கால்நடை நோய் புலனாய்வு பிரிவில் ஹெல்பராக பணிபுரிந்து 14.01.2009 அன்று பணியிடை மரணமடைந்த திரு.மு. பச்சையப்பன், என்பவரின் மகன் திரு. ப. கார்த்திக் என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலூர் மண்டலம், முகுந்தராயபுரம், ஆட்டுப்பண்ணை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 06.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 06.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் இளநிலை உதயியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு. ப. கார்த்திக் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 06.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப்

பெற விதிகளின்படி தனியர் தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.16661/க்யூ-1/2022-1, நாள் 29.09.2022 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.கு. எண்.3258537/ஜி2/2022, நாள் 11.10.2022ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திரு. ப. கார்த்திக், இளநிலை உதவியாளர்
(ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35. வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
நகல்
தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(ஜா. மகிமா நித்யா)
அரசு சார்புச் செயலாளர்
20.10.22
20.10.22